செ.வெ.எண். 15/ஜூன் செய்தி வெளியீடு நாள்: 06.06.2016

தருமபுரி மாவட்டத்தில் உள்ள மாவட்ட மின் ஆளுமை சங்கம் மூலமாக மொத்தம் 327 அரசு இ-சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. ஆவற்றில் 7 மையங்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலமாக வட்டாட்சியர் அலுவலகங்களிலும், 1 மையம் தமிழ்நாடு மின்னணு (ELCOT) நிறுவனம் மூலமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர கிராம ஊராட்சி பகுதிகளில் 126 மையங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாகவும், 193 மையங்கள் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலமாகவும் சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இச்சேவை மையங்கள் மூலமாக வருவாய்த்துறை சான்றிதழ்கள், சமூக நலத்துறை திருமண நிதி உதவித் திட்டம் போன்ற பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது அரசு இ-சேவை மையங்களின் மூலமாக மின் கட்டணமும் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் மின் நுகர்வோர் மின் கட்டணம் செலுத்த மின்வாரிய அலுவலர்களுக்கு நீண்ட தூரம் செல்லத் தேவையில்லாமல் தங்களுடைய இல்லங்களுக்கு அருகில் உள்ள இ-சேவை மையத்தின் சேவையை பயன்படுத்தி மின் கட்டணத்தை செலுத்தலாம்.

பொது மக்கள் மேற்கண்ட அரசு இ-சேவை மையங்கள் மூலமாக மின் கட்டணம் செலுத்தி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.